# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **இந்திய அரசியலமைப்பு வரலாற்று பின்னணி மற்றும் உருவாக்கம்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய அரசியலமைப்பு வரலாற்று பின்னணி மற்றும் உருவாக்கம்

## வரலாற்று பின்னணி

நமது அரசியலமைப்பின் பல்வேறு சிறப்பியல்புகள் ஆங்கிலேய ஆட்சியின் தாக்கத்தைக் கொண்டுள்ளன. ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட காலனி ஆதிக்கச் சட்டங்கள் நமது அரசியலுக்கும், அரசியலமைப்புக்கும் தூண்டுதலாக உள்ளன. அவை,

## I. வணிகக்குழுவின் கீழ் சட்ட வளர்ச்சி

### ஒழுங்குமுறைச் சட்டம் (1773)

- இங்கிலாந்து பிரதமர் "நார்த் பிரபு" வணிகக்குழுவின் விவகாரங்களை விசாரிக்க தேர்வுக் குழுவை நியமித்தார்.
- இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் 1773 ஒழுங்குமுறைச் சட்டம் மிக முக்கியமானது.
- ஏனெனில் இந்தியாவில் கம்பெனி நிர்வாகத்தின் மீது பிரிட்டிஷ் நாடாளுமன்றம் தனது கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதற்கான முதல் முயற்சியாக அச்சட்டம் அமைந்தது.
- இச்சட்டம் முதன் முறையாகக் கம்பெனி ஆட்சிக்காக எழுதப்பட்ட அரசியலமைப்பு ஒன்றை வழங்கியது. கம்பெனி அரசியல் மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை அங்கீகரித்தது.
  1. வங்காளம், மும்பை, சென்னை ஆகிய மாகாணங்களின் நிர்வாக அமைப்பினை ஒரே அதிகார அமைப்பின் கீழ் கொண்டுவரச் செய்தது.
  2. வங்காள ஆளுநரை மேற்கண்ட மூன்று மாகாணங்களுக்கும் தலைமை ஆளுநராக நியமித்தது. முதல் ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸ்.
  3. தலைமை ஆளுநருக்கு உதவி புரிய நான்கு பேர் கொண்ட ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டது.
  4. கல்கத்தாவில் ஒரு தலைமை நீதிமன்றம் அமைக்கப்பட்டது. (1774) (1- தலைமை நீதிபதியும் 3 - துணை நீதிபதியும் இருப்பர்)
  5. ஊழியர்களின் தனியார் வியாபாரம் தடை செய்யப்பட்டது.

### பிட் இந்தியச் சட்டம் (1784)

- 1773-ல் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் களைய பிட் இந்தியச் சட்டம் உருவாக்கப்பட்டது.
  1. கம்பெனியின் வணிகக் குழுவுக்கு இயக்குநர் பொறுப்பு மட்டுமே அளிக்கப்பட்டது.
  2. அரசியல் விவகாரங்களைக் கவனிப்பதற்காக ஆறு உறுப்பினர்கள் கொண்ட "கட்டுப்பாட்டு வாரியம்" அமைக்கப்பட்டது. இங்கிலாந்து அரசரால் நியமிக்கப்பட்டனர்.

3. இந்திய நிர்வாகம் தொடர்பாக அலுவல்களைக் கவனிக்க இங்கிலாந்தில் தனித்துறை அமைக்கப்பட்டது.

**சாசனச் சட்டம் (1813)**

- ஒவ்வொரு இருபதாண்டுகளுக்கு ஒருமுறை சாசனச் சட்டங்கள், கிழக்கிந்திய கம்பெனியின் சாசனத்தை நீட்டிக்க வகை செய்தது.
- கல்விக்கு ஒரு இலட்சம் நிதியாக வழங்கப்பட்டது.

**சாசனச் சட்டம் (1833)**

- தலைமை ஆளுநரின் கவுன்சில் கூட்டங்களைச் சட்டமியற்றுவதற்கான கூட்டங்கள் என்றும், நிர்வாகக் கூட்டங்கள் என்றும் பிரித்துப் பார்க்க வகை செய்தது.

1. அனைத்து சிவில், ராணுவ அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி, கண்காணிக்கின்ற அதிகாரம் தலைமை ஆளுநரின் கவுன்சிலுக்கு அளிக்கப்பட்டது.
2. கூடுதலாகச் சட்ட உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார். (மெக்காலே)
3. மைய அரசு வலிமை உடையதாகிறது. மாகாணங்கள் தங்களுக்கென சட்டமியற்றிக் கொள்ளும் உரிமைகள் இழந்தன.

**சாசனச் சட்டம் (1853)**

1. சட்டமியற்றும் பணிக்காகத் தலைமை ஆளுநரின் கவுன்சிலில் மேலும் ஆறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.
2. கவுன்சிலின் சட்டமியற்றும் பணியும், நிர்வாகப் பணியும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டன.
3. அரசுப் பணிகளுக்குப் **போட்டித் தேர்வை** அறிமுகம் செய்தது.
4. முதன் முறையாக உள்நாட்டு மக்களுக்கு மைய சமப் பிரதிநிதித்துவம்.

## II. பிரிட்டிஷ் அரசின் கீழ் சட்டவளர்ச்சி

**இந்திய அரசாங்கச் சட்டம் (1858)**

1. கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் இருந்த இந்திய ஆட்சிப் பகுதிகள் அனைத்தும் நேரிடையாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தன.
2. 1858 நவம்பர் 1-ல் “அலகாபாத் தர்பார்” மூலம் வெளியிடப்பட்ட மகாராணியின் இந்தப் பேரறிக்கை “மகாசாசனம்” என அழைக்கப்பட்டது.
3. இந்தியாவின் தலைமை ஆளுநர் “அரசுப் பிரதிநிதி” என அழைக்கப்பட்டார். அதன்படி முதல் அரசப் பிரதிநிதி வைசிராய் கானிங்பிரபு ஆவார்.

**இந்தியக் கவுன்சில் சட்டம் (1861)**

1. சட்டமியற்றுதல், பிரதிநிதித்துவ அமைப்புகளில் தொடக்கமாக இது அமைந்தது.

2. தலைமை ஆளுநரின் கவுன்சிலில் அலுவல் சாராத உறுப்பினர்களை அதாவது, இந்தியர்களை இணைத்துக் கொள்ள வழிவகை செய்தது.
3. பம்பாய், சென்னை மாகாணங்கள் முன்பு இழந்த சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றன.

**இந்தியக் கவுன்சில் சட்டம் (1892)**

1. தலைமை ஆளுநரின் கவுன்சில், மாகாணக் கவுன்சில்களில் கூடுதல் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அவை விரிவுப்படுத்தப்பட்டன.
2. அலுவல் சாராத உறுப்பினர்களை நியமனம் செய்ய மறைமுகத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
3. கவுன்சில் உறுப்பினர்கள் வரவு – செலவு அறிக்கை பற்றி விவாதம் நடத்தவும், பொது மக்கள் நலன் கருதி வினாக்கள் எழுப்பவும் அனுமதிக்கப்பட்டனர்.
4. பிரதிநிதித்துவமுறை, நிர்வாகத்துறை பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக இருத்தல் முதலிய கொள்கைகள் இச்சட்டத்தின் மூலம் செயல்வடிவம் பெறத் தொடங்கின.

**இந்தியக் கவுன்சில் சட்டம் (1909)**

**(மிண்டோ - மார்லி சீர்திருத்தங்கள்)**

1. மத்திய, மாகாணக் கவுன்சில்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அவற்றின் செயல்பாடுகளும் விரிவுபடுத்தப்பட்டன.
2. தலைமை ஆளுநரின் கவுன்சில்களில் நியமன உறுப்பினர்கள் பெரும்பான்மையாகவும், மாகாணக் கவுன்சில்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெரும்பான்மையாகவும் இருந்தனர்.
3. சாதி அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறையும், இஸ்லாமியருக்குத் தனித் தொகுதி முறையும் அறிமுகம் செய்யப்பட்டன.
4. உறுப்பினர்கள் பட்ஜெட் மீது துணைக் கேள்விகள் எழுப்பவும், தீர்மானங்கள் கொண்டு வரவும் அனுமதி அளிக்கப்பட்டனர்.

**இந்திய அரசாங்கச் சட்டம் (1919) (மாண்டேகு செம்ஸ்போர்டு)**

1. மத்தியில் இருந்த சட்டமியற்றும் கவுன்சிலுக்குப் பதிலாக மாகாணங்களின் அவை (மேலவை), சட்டமன்றப் பேரவை (கீழவை) என்ற ஈரடுக்கு முறை உருவாக்கப்பட்டது.
2. இரு அவைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெரும்பான்மை பெற்றனர்.
3. அரசாங்கத்தின் பணிகள் வரையறுக்கப்பட்டு, மைய அரசுப்பணிகள், மாநில அரசுப்பணிகள் எனப் பிரித்தறியப்பட்டன.

4. மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆளுநரின் நிர்வாகத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பணிகள் எனவும், சட்டமன்றத்திற்குப் பொறுப்புடைய அமைச்சரவையின் கீழ் மாற்றப்பட்ட பணிகள் எனவும் பகிர்ந்தளிக்கப்பட்டன.
5. முதன்முறை நேரடித் தேர்தல்முறை அறிமுகம். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 1924-ல் அமைக்கப்பட்டது.

**இந்திய அரசாங்கச் சட்டம் (1935)**

1. இந்தியாவின் இருந்த பிரிட்டிஷ் மாகாணங்களையும் இணைய விருப்பமுள்ள சுதேச அரசுகளையும் உள்ளடக்கிய “அனைத்திந்தியக் கூட்டரசு” அமைப்பு ஒன்று உருவாக வழி செய்தது. எனினும், சுதேச அரசுகள் உடன்படாததால் கூட்டரசு உருவாகவில்லை.
2. இதுவரை பிரிட்டீஷ் இந்தியா நிர்வகிக்கப்பட்டுவந்த ஓரடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.
3. இச்சட்டத்தின்படி அரசாங்கத்தின் அதிகாரங்கள் மூன்று பட்டியல்களாகப் பிரிக்கப்பட்டன. அவை கூட்டாட்சிப் (மத்திய) பட்டியல், மாகாணப் பட்டியல் மற்றும் பொதுப்பட்டியல் என்பனவாகும்.
4. மாகாண அரசுகள், மாகாணப் பட்டியலில் உள்ள பணிகளில் மத்தியக் கட்டுப்பாடு ஏதுமின்றி நிர்வாகம் மற்றும் சட்டமியற்றும் பணிகளை மேற்கொள்ளக் கூடிய தனியொரு சட்டப்பூர்வ அமைப்பாக உருப்பெற்றன.
5. மத்திய அரசாங்கத்தில் இரட்டை ஆட்சி முறை கொண்டு வரப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகள் தலைமை ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக் குழுவின் கீழும், மாற்றப்பட்ட துறைகள் அமைச்சரவையின் பொறுப்பிலும் விடப்பட்டன.
6. மாகாணங்களில் இரட்டையாட்சி முறை ஒழிக்கப்பட்டு மாகாண சுயாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
7. மாகாண அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களின் பொறுப்பில் விடப்பட்டது. அமைச்சரவை சட்டமன்றத்திற்குக் கூட்டுப் பொறுப்பு உடையதாகும்.
8. ஆளுநர்நிர்வாகக்குழுவின்தலைவராகஇருப்பார். அவர்அமைச்சரவையின்ஆலோசனைப்படி செயல்படுவார் என விதிமுறைகள் செய்யப்பட்டன.
9. வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீகார் மற்றும் அஸ்ஸாம் மாகாணங்கள் இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.
10. ஒரு தலைமை நீதிபதி மற்றும் ஆறு நீதிபதிகளைக் கொண்ட கூட்டாட்சி நீதிமன்றம் டெல்லியில் நிறுவப்பட்டது.

**இந்திய விடுதலைச் சட்டம் (1947)**

1. இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு குடியேற்ற நாடுகளை (டொமினியன்) உருவாக்க **1947 ஆகஸ்ட் 15** ஆம் தேதி நாள் குறிக்கப்பட்டது.
2. இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் பேரரசியின் பொறுப்புகளும், இந்தியச் சுதேச அரசுகள் மீதான மேலாதிக்கம் 1947 ஆகஸ்ட் 15 தேதியிலிருந்து காலாவதியாகிவிடும்.
3. இரண்டு டொமினியன்களில் ஏதேனும் ஒன்றில் சுதேச அரசுகள் இணைந்து கொள்ளலாம். இரண்டு டொமினியன்களுக்கும் தனித்தனியாக இரண்டு கவர்னர் ஜெனரல்களை பிரிட்டிஷ் பேரரசி நியமிப்பார்.
4. இரண்டு டொமினியன்களுக்கும் தனித் தனியாகச் சட்டமன்றங்கள் இருக்கும். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் தலையீடு இன்றிச் சட்டமியற்றும் முழு அதிகாரம் அவற்றுக்கு உண்டு.
5. டொமினியன்களை ஆட்சி புரிவதற்கான தற்காலிக ஏற்பாடாக, இரண்டு டொமினியன்களின் அரசியல் நிர்ணய சபைகளுக்கும் டொமினியன் நாடாளுமன்றத்திற்கான அந்தஸ்து அளிக்கப்பட்டது.
6. பஞ்சாப், வங்காளம் ஆகிய மாகாணங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு எல்லை ஆணையம் ஏற்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டது.
7. இந்தியச் சுதந்திர சட்டம் 1947யை முழுமையாக அமல்படுத்துவதற்குத் தேவையான விஷயங்கள் குறித்து தற்காலிக ஆணைகள் பிறப்பிக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
8. இச்சட்டம் மத்தியிலும், மாகாணங்களிலும் சட்டமன்றங்களுக்குப் பொறுப்புள்ள அரசாங்கங்களை ஏற்படுத்தியது.
9. இந்திய விவகாரங்களுக்கான அமைச்சரின் பணிகள், இந்தியாவின் முப்படைகள் ஆகியவற்றுக்கான நிபந்தனைகளையும் பிரிட்டிஷ் இராணுவம், கடற்படை, வான்படை ஆகியவற்றின் மீதான பிரிட்டிஷ் பேரரசியின் அதிகார வரம்புகளையும் அச்சட்டம் வரையறுத்தது.

# அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கம்

## அறிமுகம்

1947 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. அதுவரை ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா, 1935ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தின் (The Government of India Act, 1935) கீழ் அரசாளப்பட்டு வந்தது. இச்சட்டமானது இந்தியருக்கு வரையறுக்கப்பட்ட தன்னாட்சி உரிமையை வழங்கியிருந்தது. மேலும் இச்சட்டம் பிரிட்டிஷ் பிரதேசங்கள் மற்றும் கூட்டாட்சியில் (Federation) வர விரும்பும் இந்திய மாகாணங்கள் ஆகியவற்றைக் கொண்ட அனைத்திந்திய கூட்டாட்சியை நிறுவுவதற்கு வழிவகை செய்திருந்தது. குறிப்பிட்ட அளவிற்கு மாநிலங்களுக்கு தன்னாட்சியையும் வழங்கியிருந்தது. பெடரல் நீதிமன்றத்தையும் (Federal Court) இச்சட்டம் அமைத்திருந்தது. இதன்படி பல மாகாணங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் பதவியேற்று ஆண்டு வந்தன. இந்திய விடுதலைக் கோரி காங்கிரஸ் தனது போராட்டத்தைத் துரிதப்படுத்தி விடுதலையை வேண்டியது. இந்நிலையில் 1942ஆம் ஆண்டில் ஆங்கில அரசு கிரிப்ஸ் மிஷினை (Cripps Mission) இந்தியாவிற்கு அனுப்பியிருந்தது. இதனது பிரிவுரைகளில் (Proposals) நிறைவு கொள்ளாமல் இந்தியர் அதைப் புறக்கணித்தனர். இதற்குப் பின்னர் இங்கிலாந்து நாட்டில் அரசமைந்த தொழிலாளர் அரசு, இந்தியாவிடம் அதிகப் பரிவு கொண்டு, இந்தியப் பிரச்சினைகளைத் தீர்த்திட 1946ஆம் ஆண்டில் கேபினட் மிஷினை (Cabinet Mission) இந்தியாவிற்கு அனுப்பி வைத்து. இந்திய யூனியனை நிறுவுதல், பிரிட்டிஷ் மன்னராட்சியை முடிவுக்கு கொண்டு வருதல், புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குதல் (Framing of New Constitution) மற்றும் இடைக்கால அரசு ஒன்றை ஏற்படுத்துதல் ஆகியவற்றை இது முன் மொழிந்தது. இவற்றை காங்கிரஸ் ஏற்றது. இதைத் தொடர்ந்து 1946ஆம் ஆண்டு ஜுலையில் அரசமைப்பு அவைக்கான தேர்தல் நடைபெற்றது.

இந்நிலையில் மவுன்ட்பேட்டன் பிரபு இந்தியா வந்து நிலைமையைக் கண்டறிந்து தனது பரிந்துரைகளை இங்கிலாந்து அனுப்பி வைத்தார். இவற்றை ஏற்று ஆங்கில அரசு, 1947ஆம் ஆண்டு மவுன்ட்பேட்டன் திட்டத்தில் கூறப்பட்ட வாசகங்ளைக் கொண்ட 1947ஆம் ஆண்டின் இந்திய சுதந்திரச் சட்டத்தினை (The Indian Independance Act, 1947) இயற்றியது. இது 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் முதல் இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் தனித்தனியான சுதந்திர டொமினியன்கள் உருவாக்க வழிவகுத்தது. இது அரசமைப்பு அவை அமைய அதிகாரமளித்தது; புதிய அரசமைப்புச் சட்டத்தை இயற்றும் வரை 1935ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் தொடர்ந்து செயலில் இருக்க வழிவகை செய்தது. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாளிற்குப் பிறகு மொமினியனையோ அல்லது பிரதேசங்களையோ ஆங்கில அரசு ஆள முடியாது என்று உரைத்தது. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ம் நாள், 1947ஆம் ஆண்டின் இந்திய சுதந்திரச் சட்டம் செயலுக்கு வந்தது. ஆங்கில ஆட்சியும் முடிவு பெற்றது.

சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் – ஜெனரலாக மவுன்ட்பேட்டன் பிரபு பதவியேற்றார். 1935ஆம் ஆண்டின் இந்தியச் சட்டம் திருத்தப்பட்டு, புதிய அரசமைப்புச் சட்டம் வரையப்பட்டுச்

செயலுக்கு வரும்வரை, தற்காலிக அரசமைப்புச் சட்டம் ஏற்பட வழிவகை செய்யப்பட்டது. மன்னராட்சி புரிந்த மாகாணங்கள் இந்தியாவுடன் இணைந்தன. இந்நிலையில் அரசமைப்பு அவையே, தற்காலிக நாடாளுமன்றமாகச் செயல்பட்டது. மேலும் அரசமைப்புச் சட்டம் உருவாக்கும் பணியையும் செய்தது. இந்திய அரசமைப்பு அவை, புதிய அரசமைப்புச் சட்டத்தை வரைந்து 1949ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் அறுதி செய்தது. புதிய அரசமைப்புச் சட்டம் 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் செயற்பாட்டிற்கு வந்தது.

**இந்திய அரசமைப்பு அவை**

முன்பு நாம் பார்த்தது போல், இந்திய அரசமைப்பு அவை 1946ஆம் ஆண்டில் கேபினட் மிஷன் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டு ஜீலையில் அரசமைப்பு அவைக்கான உறுப்பினர்கள் பிரதேச சட்டமன்றங்களால் (Provincial Assemblies) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மன்னர் ஆட்சி புரிந்த மாகாணங்களின் பிரதிநிதிகள் 93 உறுப்பினர்கள் உள்பட மொத்தம் 389 உறுப்பினர் இதில் இடம் பெற்றிருந்தனர். இந்த அவையின் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பிரதிநிதிகள் (representatives) ஆவர். எனவே அரசமைப்பு அவையின் உறுப்பினர் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லர்.

இந்திய அரசமைப்பு அவையின் முதல் கூட்டம் 1946ஆம் ஆண்டின் டிசம்பர் 9ஆம் நாள் நடைபெற்றது. இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் மிகச் சிறப்பும், பெருமையும் வாய்ந்தவர்கள் ஆவர். அவர்களில் சிலர் ஜவஹர்லால் நேரு, இராஜேந்திர பிரசாத், சர்தார் வல்லபாய் படேல், அபுல் கலாம் ஆசாத், கே.எம்.முன்ஷி, ஜி.பி.பந்த, கோபாலசுவாமி அய்யங்கார், டி.டி.கிருஷ்ணமாச்சாரி, டாக்டர்.எஸ். இராதாகிருஷ்ணன், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், எச்.என்.குன்ஸ்ரு, புருஷோத்தம் தாஸ் தான்ண், பி.ஜி.கொ. எம்.ஆர்.மசானி, டாக்டர்.ஜயகர், டாக்டர். சச்சிதானந்த சின்ஹா, அப்துல் கபார்கான் போன்றவர்கள். மகாத்மா காந்தி இந்திய அரசமைப்பு அவையின் உறுப்பினர் அல்லர். முதல் கூட்டம் 1946ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் நடைபெற்றது. டிசம்பர் 11ஆம் தேதி டாக்டர் இராஜேந்திர பிரசாத் இந்த அவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டிசம்பர் 13ஆம் நாள் இந்த அவையில் ஜவஹர்லால் நேருவால், அரசமைப்பு அவையின் குறிக்கோள்கள் பற்றிய தீர்மானம் முன்மொழியப்பட்டது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 29ஆம் நாள் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தலைமையில் ஒரு வரைவுக் குழு (Drafting Committee) நியமிக்கப்பட்டது. பல்வேறு பொருள்கள் குறித்து விரிவாக ஆராய குழுக்கள் பல நியமிக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் தயாரித்த அறிக்கைகள் அரசமைப்பு அவையில், பின்னர் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த அறிக்கைகளின் அடிப்படையில் அரசமைப்பு ஆலோசகர் டாக்டர் பி.என்.ராவ் அவர்களால் வரைவு அரசமைப்புச் சட்டம் (Draft Constitution) ஒன்று உருவாக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் தலைமையின் கீழ், வரைவுக் குழு, இதை ஆராய்ந்து 315 உறுப்புகள் மற்றும் 8 அட்டவணைகள் கொண்ட அரசமைப்பு வரைவு ஒன்றினை உருவாக்கியது. இதனை அரசமைப்புக் குழு விரிவாகக் கவனத்தில் கொண்டு ஆராய்ந்து விவாதித்தது. பின்னர் இறுதியாக 395 உறுப்புகளும்

8 அட்டவணைகளும் கொண்ட வரைவினை அரசமைப்புக் குழு ஒப்புக் கொண்டது. இது 1948ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியானது. இந்த வரைவினை விவாதிக்கவும், திருத்தங்களை முன்மொழியவும், குடிமக்களுக்கு 8 மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டது. இறுதியாகப் புதிய அரசமைப்புச் சட்டம், அரசமைப்பு அவையினால் 1949ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் ஏற்கப்பட்டது. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க எடுக்கப்பட்ட கால அளவானது இரண்டு ஆண்டுகள் பதினொரு மாதங்கள் 17 நாள்கள் ஆகும். உறுப்புகள் 5 முதல் 9, 60, 324, 366, 367, 372. 380, 391 முதல் 393 ஆகியவை உடனடியாக செயலுக்கு வந்தன. மற்றவை 1950 ஜனவரி 26ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தன. அரசமைப்பு அவை, அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியதோடு அல்லாமல் வேறு சிலபணிகளையும் ஆற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசமைப்பு அவை, நாடாளுமன்றமாகவும் செயல்பட்டது. இது பல சட்டங்களை இயற்றியது. தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டது. இந்தியக் குடியரசுத் தலைவருக்கான தேர்தலையும் மேற்கொண்டது.

**அரசமைப்பிற்கான மூலங்கள் (Sources of the Constitution)**

இந்திய அரசமைப்பினை உருவாக்கிய பெருமக்கள், தமது பழைய சொந்த அனுபவங்கள் மற்றும் இதர நாடுகளின் அனுபவங்கள், இவற்றிலிருந்து கற்றுணர விரும்பினர். எனவே நமது நாட்டின் சூழ்நிலைக்கும், நிலைமைக்கும் ஏற்ப பல நாட்டு அரசமைப்புச் சட்டங்களின் சிறப்பான பகுதிகளை நமது அரசமைப்புச் சட்டத்தினில் சேர்ந்தனர். கீழ்க்கண்ட சிறப்புக் கூறுகள் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாடுகளிடம் இருந்து பெறப்பட்டதாக கூறப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | சட்டத்தின் ஆட்சி, ஒற்றைக் குடியுரிமை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள் | இங்கிலாந்து |
| 2 | அடிப்படை உரிமைகள், நீதமுறை மேலாய்வு, நீதித்துறை சுதந்திரம் | அமெரிக்கா |
| 3 | கூட்டாட்சி முறை அமைப்பு | கனடா |
| 4 | அரசமைப்புச் சட்டத்திருத்தம், இராஜ்ய சபா உறுப்பினர்கள் தேர்தல் | தென்னாப்பிரிக்கா |
| 5 | பொதுப்பட்டியல் | ஆஸ்திரேலியா |
| 6 | நெருக்கடிகால நிலையின் போது அடிப்படை உரிமைகள் இடை நீக்கம் | ஜெர்மனி |
| 7 | அரசுக் கொள்கையை வழி செலுத்திச் செல்லும் நெறிமுறைகள், குடியரசுத் தலைவர் தேர்தல் | அயர்லாந்து |

இந்திய அரசமைப்புச் சட்டம், 1935ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தின் முக்கியச் சிறப்பியல்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இணைப்பாட்சி

அல்லது கூட்டாட்சி இணைப்பு முறை, நாடாளுமன்ற அரசு, ஆளுநரின் பதவி, நெருக்கடிகால நிலை அதிகாரங்கள் போன்றவை இவை. 1935ஆம் ஆண்டின் இந்தியச் சட்டத்தின் பல பகுதிகள் அப்படியே அதன் நகலாக இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ளன என்பதாக பேராசிரியர் ஜென்னிங்ஸ் (Prof. Jennings) கூறியுள்ளார். மொழியிலும், பொருளிலும் இந்திய அரசமைப்புச் சட்டம், 1935ஆம் ஆண்டு சட்டத்தின் நகலாக உள்ளது என்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது இருக்கும் அமைப்பு முறை அப்படியே வெளிப்படையாக அல்லது உட்கிடையாக அரசமைப்புச் சட்டத்தினால் ஏற்கப்பட்டுள்ளது. அந்த அளவிற்கு 1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் தாக்கம் புதிய அரசமைப்புச் சட்டத்தின் மீது உள்ளது என்று பேராசிரியர் எம்.பி.சர்மா கூறியுள்ளார்.

## வினாக்கள்

1. வணிகக்குழுவின் கீழ் சட்டவளர்ச்சி பற்றி தொகுப்பு தருக.
2. இந்தியா கவுன்சில் சட்டங்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
3. இந்திய அரசமைப்பு உருவாக்கம் பற்றி விவரித்து எழுதுக.

வாய்மையே வெல்லும்